**IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM,**
**FAST TRACK MAHILA COURT, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 20/2024**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | : | **P.W.4 (LW.4 )** |
| **Name** | : | திருமதி. கருப்பாயி |
| **Father's Name** | : | சுப்பிரமணி |
| **Village** | : | அஸ்தினாபுரம் கிராமம் |
| **Taluk** | : | வந்தவாசி தாலுக்கா |
| **Calling** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25-06-2026**

எதிரி ஆஜர்..
முதல் விசாரணை..

நான் தற்பொழுது அஸ்தினாபுரம் கிராமம், தெள்ளாரு, வந்தவாசி வட்டம் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். என் மகன் பெயர் குமார். என் பெரிய மகன் பெயர் கன்னியப்பன். கன்னியப்பனின் மனைவி விஜயா. என் பெரிய மகள் பெயர் சரசு. அவர் கணவர் பெயர் ஆறுமுகம். கன்னியப்பன் மற்றும் சரசு ஆகியோர் இறந்து ரொம்ப வருடங்கள் ஆகிறது. குமார் மரம் வெட்டும் தொழில் செய்கிறார். பூங்கொடி என்னுடைய இளைய மகள். என் பேத்தியின் பெயர் மங்கை. பூங்கொடியின் கணவர் பெயர் முருகன். அவர் தான் ஆஜரில் உள்ளார். நான் ஊருக்கு போயிருந்தேன். அப்போது என் மகள் பூங்கொடியை எதிரி முருகன் வெட்டியதாக ஊரில் சொன்னார்கள். நான் அந்த சமயத்தில் ஊரில் இல்லை. எதற்காக வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. என் மகள் இற்நது விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை..

இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். முருகன் பூங்கொடியை வெட்டியதாக சொல்லும் விவரங்கள் நான் கேள்விப்பட்ட விவரம் என்றால் சரிதான். எங்கள் ஊர் ஆட்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் அதனால் இந்த விவரம் தெரியும். போலீசார் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். மற்றவர்களிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் சின்னராசு, வேலியப்பன், குமார், விஜய், ராஜா, சங்கர் ஆகியோரும் காவல் நிலையம் வந்து கையொப்பம் போட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எழுதிய பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா, எழுதாத பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கு விவரம் தெரியாது என்றும், என்னை அழைத்த வரும்போது, போலீசார் விவரங்களை சொன்னார்கள் என்றும் அதை வைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

Sd/- V. Damodaran, 25.06.2026
**SESSIONS JUDGE,**
**FAST TRACK MAHILA COURT,**
**TIRUVANNAMALAI.**

**IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM,**

**FAST TRACK MAHILA COURT, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 20/2024**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | : | **P.W. 5 (LW.5 )** |
| **Name** | : | திரு. குமார் |
| **Father's Name** | : | சுப்பிரமணி |
| **Village** | : | அஸ்தினாபுரம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25-06-2026**

எதிரி ஆஜர்..

முதல் விசாரணை..

நான் தற்பொழுது அஸ்தினாபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். சாட்சி கருப்பாயி எனக்கு சொந்தக்காரர். நான் மரம் அறுக்கும் தொழில் செய்கிறேன். எனக்கு திருமணம் ஆகி விட்டது. என் உடன் பிறந்தவர்கள் சாந்தி, விஜயலட்சுமி மற்றும் கண்ணன் ஆவர். பூங்கொடி எனக்கு சித்தி முறை வேண்டும். சித்தி என்று தான் கூப்பிட்டுக்கொண்டிருந்தேன். என் சித்தியின் வீட்டுக்காரர் ஆஜர் எதிரி முருகன். பூங்கொடி இறந்து விட்டார். அவர் எப்படி இறந்து விட்டார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு சாட்சி மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்..

அரசு தரப்பிலான குறுக்கு விசாரணை..

போலீஸ் விசாரணையில் கடந்த 03.09.2015 அன்று இரவு 12.00 மணி

அளவில் சத்தம் கேட்டது என்றும் நான்_எழுந்து போய் புஷ்பா வீட்டருகே சென்று பார்த்தபோது என் அக்கா கழுத்து வெட்டப்பட்ட நிலையில் தலை தொங்கிக்கொண்டு இருந்தது என்றும், என் அக்கா மகள் புஷ்பா தூக்கி பிடித்துக் கொண்டிருந்தார் என்றும், என் அக்கா இறந்து கிடந்தாதார் என்றும், நான் என்ன நடந்தது என்று என் அக்கா மகள் புஷ்பாவை கேட்டபோது அதற்கு அவர் அப்பா அம்மாவுடன் சண்டை போட்டு அடித்தார் என்றும், அம்மா அப்பாவிடம் இருந்து தப்பித்து ஓடி வந்துட்டாங்க என்றும் பிறகு இரண்டு பேரும் அமைதியாக ஆகிவிட்டார்கள் என்றும் அம்மா வீட்டுக்குள் உட்காந்திருந்தார் என்றும், நான் வெளியே உட்கார்ந்து கொண்டு இருந்தேன் என்றும் அப்பா வந்து கூறையில் சொருகி வைத்திருந்த கத்தி எடுத்து அம்மா கழுத்தில் இரண்டு வெட்டு வெட்டினார் என்றும் அம்மா தலை தொங்கிடுச்சு என்றும் பிறகு தம்பியும் மாமாவும் வந்தார்கள் என்றும் அதை பார்த்து அப்பா கத்தியை வீட்டிலே போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்று என் அக்கா மகள் புஷ்பா என்னிடம் சொன்னார் என்று போலீசானையில் சொல்லிவிட்டு தற்பொழுது இந்த வழக்கு விவரம் ஏதும் எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

<u>எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை..</u> இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

Sd/- V. Damodaran, 25.06.2026
**SESSIONS JUDGE,**
**FAST TRACK MAHILA COURT,**
**TIRUVANNAMALAI.**